Australian Government

COVID-19 VACCINATION

# COVID-19-இன் நீண்ட-கால விளைவுகள்

27 ஜூன் 2022

COVID-19 தொற்று ஏற்படும் பெரும்பான்மையானோருக்கு இந்த நோயின் அறிகுறிகள் குறுகிய ஒரு காலத்திற்கு இருக்கும், மற்றும் ஒரு சில வாரங்களுக்குள்ளாக அவர்கள் சுகமடைவர். COVID-19-இல் இருந்து குணமடைவதற்கு ஆகும் காலம் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறானதாக இருக்கும். COVID-19 காரணமாக நீங்கள் எந்த அளவிற்கு நோயுற்றிருந்தீர்கள் என்பதைப் பொறுத்து இது அமையும். முன்பிருந்தே இருக்கும் மருத்துவ நிலைகள் எதுவும் உங்களுக்கு இருக்கின்றனவா என்பதைப் பொறுத்தும் இது அமையலாம்.

COVID-19 நோய் ஏற்பட்ட பிறகு நீண்ட-கால உடல்நலப் பிரச்சினைகளுக்கு ஆளாகும் சிலர் உள்ளனர். சில வேளைகளில், ஆரம்ப நிலை சுகவீனத்திற்குப் பிறகு, தாம் நலமாக இல்லாதது போன்ற உணர்வைப் பல மாதங்களுக்கு COVID-19 ஒருவருக்கு ஏற்படுத்தும். இது 'நீண்ட-நாள் கோவிட்' ('long COVID') என்று சொல்லப்படுகிறது. இந்த வைரஸ் ஒருவருக்கு இல்லாதபோது கூட, இந்த 'நீண்ட-நாள் கோவிட்' பல வாரங்களுக்கும், மாதங்களுக்கும் நீடிக்கலாம்.

தீவிரமான 'கோவிட்' ஏற்பட்டிருந்தவர்களுக்கு 'நீண்ட-நாள் கோவிட்' ஏற்படுவதற்கான சாத்தியம் அதிகம். இருந்தாலும், மிதமான COVID-19 ஏற்பட்டு மருத்துவமனைக்குச் செல்லவேண்டிய தேவை ஏற்படாதவர்களுக்கு கூட 'நீண்ட-நாள் கோவிட்' ஏற்படக்கூடும்.

## 'நீண்ட-நாள் கோவிட்'-இன் அறிகுறிகள்

பலவகைப்பட்ட நோயறிகுறிகளை 'நீண்ட-நாள் கோவிட்' தோற்றுவிக்கக்கூடும், மற்றும் ஒவ்வொருவரையும் இது வெவ்வேறான விதத்தில் பாதிக்கக்கூடும். நோய்த்தொற்றிற்குப் பிறகு அறிகுறிகள் தொடரலாம், அல்லது COVID-19-இல் இருந்து ஒருவர் குணமடைந்த பிறகு நோயறிகுறிகள் மீண்டும் ஏற்படலாம்.

ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள பொதுவான நோயறிகுறிகள் மற்றும் நிலைகளில் உள்ளடங்குவன:

- களைப்பு
- சுவாசிப்பதில் சிரமம்
- இடைவிடாத இருமல்
- நெஞ்சு வலி
- மூட்டு வலி
- உடற்பயிற்சி செய்யும் அளவிற்கான தெம்பு இல்லாமை
- காய்ச்சல்
- தலைவலிகள்
- ஞாபக சக்தியிலும், தெளிவாக சிந்திப்பதிலும் பிரச்சினைகள் (‘மூளைப் பனிமூட்டம்’ ((‘brain fog’))
- மனச்சோர்வு அல்லது படபடப்பு.

## ‘நீண்ட-நாள் கோவிட்’-ஐத் தடுத்தல்

COVID-19 வைரஸ் தொற்று உங்களுக்கு ஏற்படுவதிலிருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்வது ‘நீண்ட-நாள் கோவிட்’-ஐத் தடுப்பதற்கான மிகச் சிறந்த வழியாகும்.

COVID-19தொற்று ஏற்படும் ஆபத்துகளைக் குறைப்பதற்கான மிகச் சிறந்த வழி தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வதாகும்.

COVID-19 -இற்கு எதிரான தடுப்பூசிகளை இட்டுக்கொண்டவர்களுக்கு ‘நீண்ட-நாள் கோவிட்’-இற்கான அறிகுறிகள் ஏற்படும் சாத்தியம், தடுப்பூசிகளை இட்டுக்கொள்ளாதவர்களுக்கு இருக்கும் சாத்தியத்தை விடக் குறைவு என்று ஆய்வு குறிகாட்டுகிறது.

## மேலதிகத் தகவல்களுக்கு

உங்களுக்கு COVID-19 இருப்பது ஒரு சில வாரங்களுக்கு முன்பாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தால், மற்றும் நீங்கள் இப்போதும் சுகவீன உணர்வுடன் இருந்தால், உங்களுடைய மருத்துவருடன் பேசுங்கள்.

மேலதிகத் தகவல்களுக்கு health.gov.au/covid19-vaccines-languages எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள், அல்லது National Coronavirus Helpline -ஐ 1800 020 080-இல் அழையுங்கள். இலவச உரைபெயர்ப்பு சேவைகளுக்கு ‘தெரிவு-8’ -ஐ மேற்கொள்ளுங்கள்.